# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-5 | Date : 24.09.2024
Case No. : **O.S.** 469/2019 | Nationality : Indian
Name : ராஜ் (எ) ஆரோக்கியசாமி | Religion :
Father's/Husband's Name : அபூர்வசாமி | Age : 52
Village :
Taluk :

<u>வா.சா.5</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் மேலஅகலங்கண் கோடிமங்கலம் கிராமத்தில் குடியிருந்து வருவதற்கான அடையாள அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் அங்கு குடியிருக்கவில்லை என்றாலும் பழிஞ்சியநல்லூர் கிராமத்தில்தான் குடியிருந்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து எங்குள்ளது என்றால் எஸ்.புதூர் மெயின்ரோட்டில் காரைக்கால் ரோட்டில் உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தென்புறம் உள்ள சொத்தின் சர்வே எண் 218 ஆகும். வடபுறம் உள்ள சொத்தின் சர்வே எண் 194 ஆகும். மேற்படி சர்வே எண்களை நான் எந்த ஆவணத்தை பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் கிராம நிர்வாக அலுவலர் அளக்கும்போது தெரிந்து கொண்டேன்.

2. மரம் வெட்டியபோது கிராம நிர்வாக அலுவலர் இடத்தை அளந்தாரா என்றால் அளந்தார். என்னிடம் எல்லைக் கேட்டார் அப்போது நான் பார்த்தேன். எந்த ஆவணத்தை பார்த்தேன் என்றால் ஏ ரிஜிஸ்டரை பார்த்தேன். ஏ ரிஜிஸ்டரை பார்க்க வேண்டி அவசியம் என்னவென்றால் எனக்கு அவசியம் ஏதுமில்லை. அங்கு அளந்ததால் நான் பார்த்தேன். 13.07.2014 ம் தேதி என்ன நடந்தது என்றால் தென்புறமுள்ள சொத்தில் பிரதிவாதிக்கு ஒரு

கூரை வீடு உள்ளது. எல்லை சம்மந்தமாக பிரதிவாதிக்கும் கோவிந்ராஜ், முருகன், சுரேஷ் ஆகியோருக்கிடையே பிரச்சனை ஏற்பட்டது. நாங்கள் சென்று சமாதானப் படுத்தினோம். எனக்கு விவசாய தொழில் ஆகும். பஞ்சாயத்து பேச என்னை யார் அழைத்தது என்றால் முருகன் வீட்டில் இருந்து என்னை அழைத்தார்கள்.

3. என்னை முருகன் வீட்டார் அழைக்க வேண்டிய அவசியம் என்னவென்றால் எஸ்.புதூரில் உள்ள பங்கு கோவில் 15 கிராமங்களுக்கு உட்பட்டது என்பதால் என்னையும் அழைத்தார்கள். நான் கிராமத்தில் என்ன பொறுப்பில் உள்ளேன் என்றால் எந்த பொறுப்பிலும் இல்லை. அரசியல் கட்சியில் உள்ளேனா என்றால் இல்லை. 13.07.2014 ம் தேதி பஞ்சாயத்தில் என்ன பேசப்பட்டது என்றால் இருவரையும் சமாதானமாக போக சொன்னோம். இல்லை என்றால் காவல் நிலையம் செல்ல சொன்னோம். என்ன பிரச்சனை என்றால் இடப்பிரச்சனையாகும். எத்தனை வருடமாக எனக்கு அந்த இடம் தெரியும் என்றால் எனக்கு சிறு வயதில் இருந்தே தெரியும். அலெக்சாண்டர் வாங்கிய இடத்தில் ஏற்கனவே டெய்லர் கடை இருந்ததா என்றால் இருந்தது. அதில் ஜவுளி கடை இருந்ததா என்றால் இல்லை.

4. 16.07.2014 ல் என்ன் நடந்தது என்றால் சொத்தினை அளப்பதற்காக வந்தவர்களை பிரதிவாதி திருப்பி அனுப்பிவிட்டார். யார் அளக்க வந்தது என்றால் முருகன் பணம் செலுத்தி அளக்க சொன்னதின்பேரில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் ஒருவர் மற்றும் ஊர்க்காரர்கள் அளப்பதற்காக வந்தார்கள். பிரதிவாதி அளக்க வந்தவர்களை என்ன செய்தார்கள் என்றால் நான் செல்லும்போது கூட்டம் கலைந்துவிட்டது. சண்டை நடந்ததாக என்னிடம் யார் சொன்னது என்றால் முருகன் சொன்னார். 22.04.2015 ம் தேதி என்ன நடந்தது என்றால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. 27.04.2015 ம் தேதி என்ன நடந்தது என்றால் எனக்கு தெரியாது. 28.11.2015 ம் தேதி என்ன நடந்தது என்றால் நீதிமன்றத்தில் இருந்து

இடத்தை அளக்க வருவதாக கூறி என்னை முருகன் வீட்டார் வர சொன்னார்கள். சொத்தை அளந்தார்களா என்றால் நான் செல்வதற்கு முன்பே சொத்தை அளந்து முடித்துவிட்டார்கள்.

5. முருகன் குடும்பத்தாருக்கும் எனக்கும் என்ன உறவு முறை என்றால் உறவு இல்லை ஊர்க்காரர் மற்றும் நண்பர் ஆவார். முருகன் என்னை மட்டும் அழைக்கவில்லை ஊர்க்காரர்கள் அனைவரையும் அழைத்தார். முருகன் குடும்பத்தார் மீது நான் அக்கறை உடைய ஆள் என்றால் சரியல்ல. 2017ம் ஆண்டு என்ன சம்பவம் நடந்தது என்றால் கோவிந்தராஜ் வீட்டின் மீது கிடந்த தென்னை மரத்தை ஆசைத்தம்பி ஏலம் எடுத்து வெட்டினார். கோவிந்தராஜ் வீடு எங்குள்ளது என்றால் காரைக்கால் மெயின்ரோட்டில் தென்புறத்தில் உள்ளது. காரைக்கால் மெயின்ரோட்டிற்கு தென்புறம் வெள்ளக்கரை உள்ளது என்றால் சரிதான். வெள்ளக்கரையில்தான் அலெக்சாண்டர் வீடு உள்ளது. கோவிந்தராஜ் வீடு அதற்கு அருகில் உள்ளது. அது பட்டா இடத்தில் உள்ளது. நான் அந்த பட்டாவினை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. எந்த ஆவணத்தின் அடிப்படையில் கோவிந்தராஜ் பட்டா இடத்தில் உள்ளது என்று நான் சொல்கிறேன் என்றால் நான் ஆவணம் எதுவும் பார்க்கவில்லை. வெட்டப்பட்ட மரம் காய்ப்பு மரம் என்றால் சரிதான். டெய்லர் கடையை சுற்றி 4, 5 தென்னை மரங்கள் இருந்தது என்றால் நான் 1 தென்னை மரத்தைதான் பார்த்தேன். தென்னை மரம் வெட்டியபோது நான் அங்கிருந்தேனா என்றால் இருந்தேன். என்னை யார் அழைத்தது என்றால் ஆசைத்தம்பிதான் அழைத்தார்.

6. ஆசைத்தம்பி ஏலம் எடுத்தற்கான ஆவணம் நான் பார்த்தேனா என்றால் இல்லை. அலெக்சாண்டர் கூரை வீட்டிற்கு கிழக்கே 20 அடி காலி இடம் உள்ளது என்றால் சரிதான். அந்த காலி இடத்திற்கு கிழக்கே கோவிந்தராஜ் வீடு உள்ளது என்றால் சரிதான்.

வெட்டப்பட்ட தென்னை மரம் கூரை வீட்டிற்கு கிழக்கே இருந்தது என்றால் சரிதான். கோவிந்தராஜ் ஓட்டு வீட்டின் மேலே சாய்ந்திருந்தது. ஓட்டிலிருந்து அரை அடி தூரத்தில் இருந்து. அந்த தென்னை மரம் சுமார் 50 வருட மரம் என்றால் சரிதான். மரத்திலிருந்து தேங்காய் மற்றும் மட்டை அந்த 20 அடி காலி இடத்தில்தான் விழும் என்றால் சரியல்ல. கோவிந்தராஜ் வீட்டில்தான் விழும். அவ்வாறு கோவிந்தராஜ் வீட்டில் விழுவதை நான் நேரடியாக பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

7. 17.03.2018 ம் தேதி என்ன நடந்தது என்றால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்மந்தமாக என்ன பிரச்சனை யார் செய்தார்கள் என்றால் இடப் பிரச்சனை நடந்தது. நிரூபண வாக்குமூலம் தட்டச்சு செய்து கொடுத்ததில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் நான் சொன்னதை தட்டச்சு செய்து கொடுத்தார் அதில் நான் கையொப்பம் செய்தேன். நான் அரசியல் கட்சியில் உள்ளேன் என்றாலும் யாராவது சாட்சியம் அளிக்க அழைத்தால் பொய் சாட்சியம் அளிப்பேன் என்றாலும் சரியல்ல. எந்த பிரச்சனை நடந்தாலும் நானாகவே கலந்து கொள்வேன் என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்து பற்றி எந்த விவரமும் தெரியாது என்றாலும் முருகன் மற்றும் கோவிந்தராஜ் குடும்பத்திற்கு நான் நெருங்கிய நண்பர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2024.09.25 10:27:58 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.